2017 ஜூலை 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தமிழக முன்னாள் முதல்வரும் சட்டமன்ற உறுப்பினருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பேரவை விதி 20(1)–ன்கீழ் தீர்மானம் ஒன்றினை முன்மொழிவதற்காக அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை நான் இப்போது படிக்கின்றேன்:

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து அவர் உடல் நலம் பெறும் வரையில் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்திய நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20(1)–ன்கீழ் சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்கு 14–6–2017 முதல் தொடங்கி நடைபெற்றுவரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பெற வேண்டும் என்று கோரியுள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்காணும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"தமிழக முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டுள்ளதையடுத்து அவர் உடல் நலம் பெறும் வரையில் பூரண ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்திய நிலையில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 20(1)–ன்கீழ் சட்டமன்ற உறுப்பினர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு 14–6–2017 முதல் தொடங்கி

நடைபெற்றுவரும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடருக்கு வராமைக்கான அனுமதி அளிக்கப்பெற வேண்டும்"

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தீர்மானத்தை வழிமொழிதல்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றுள்ளது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–20

3. தகவல் கோரல்

(அ) NEET தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு அளிக்கக் கோரும் இரண்டு சட்ட முன்வடிவுகளுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தினுடைய பெயர் 'மதராஸ்' என்று அழைக்கப்பட்டதை, 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றி, அதற்காக, 1967 ஆம் ஆண்டு, இதே தேதியில், இந்தப் பேரவையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய 'பொன் விழா ஆண்டு' என்பதை நான் இங்கே*